[2012 ஏப்ரல் 26

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின்கீழ் அட்மா திட்டத்தில் புதிய பணியிடங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள்.*

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் நீலகிரி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் ஆலங்கட்டி மழை பெய்து மிகப் பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்திலே கெந்துரை கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 8 கிராமங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு, அண்மையில் வீசிய சூறாவளி குறித்த பிரச்சினையை நான் எடுக்கப் போகிறேன். நீங்கள் இப்போது அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வரட்டும்; நான்* consider *செய்கிறேன்.*

(ஈ) போக்குவரத்து வாகனங்களுக்கு ஒரே சீரான வரி விதிப்பு முறையை அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன ஓட்டுனர்கள், அதாவது டூரிஸ்ட் வேன்களுக்கு கூடுதலான வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஐந்தாண்டுகளுக்கு 6,500 ரூபாயாக இருந்த வரியை, இப்போது ஆயுள் வரி என்று சொல்லி 65,000 ரூபாயாக உடனடியாக உயர்த்தியிருக்கிறார்கள்.*